# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை
**********************

## அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்க தேரர்களுடன் உயர் ஸ்தானிகர் சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் ஸ்ரீ கோபால் பாக்லே அவர்கள் மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் அதி வணக்கத்திற்குரிய திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் அவர்களையும், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் அதி வணக்கத்திற்குரிய வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் அவர்களையும் 2023 ஏப்ரல் 22ஆம் திகதி கண்டியில் சந்தித்தார்.

02. இந்தச்சந்திப்பின்போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த உறவுகளை சுட்டிக்காட்டிய சங்கைக்குரிய மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகா நாயக்க தேரர்கள், பல்வேறு நெருக்கடி நிலைகளின்போதும் இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஆதரவினை பாராட்டியிருந்தனர்.

03. இந்தியா – இலங்கை இடையிலான வலுவான உறவுகளுக்காக ஆசிவழங்கிய மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் அவர்களுக்கு உயர் ஸ்தானிகர் இந்தச்சந்தர்ப்பத்தில் தனது நன்றியினைத் தெரிவித்திருந்தார். அத்துடன் 2023 ஏப்ரல் 20 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்ற உலக பௌத்த மாநாட்டில் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களால் ஆற்றப்பட்டிருந்த ஆரம்ப உரைக்கு, இலங்கையில் உள்ள சிங்களமொழி அச்சு ஊடகங்களில் அதிகளவான முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது, இந்த உரை குறித்து இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்த அதி வணக்கத்துக்குரிய மகாநாயக்க தேரர், பிரதமர் மோடி அவர்கள் பௌத்தம் மீது கொண்டிருக்கும் பிணைப்பினை அவரது வார்த்தைகள் மட்டுமல்லாது அவரது செயல்களும் சான்றுபகர்வதாக தெரிவித்திருந்தார். இரு பீடங்களினதும் மகாநாயக்க தேரர்களிடம் பிரதமர் அவர்களது உரையின் சிங்கள மொழிபெயர்ப்பு உயர் ஸ்தானிகரால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

04. இச்சந்தர்ப்பத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து குறித்து வினவிய மல்வத்து பீடத்தின் மகாநாயக்க

தேரர் இந்த கப்பல் சேவையானது இரு நாடுகளினதும் மக்களுக்கு மிகுந்த நன்மை பயக்குமென குறிப்பிட்டிருந்தார்.

05. இதேவேளை, இந்தியா – இலங்கை இடையிலான வலுவான உறவுகளுக்காக ஆசி வழங்கியமைக்காகவும் இச்சந்திப்புக்காகவும் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரரிற்கு உயர் ஸ்தானிகர் தனது நன்றியினைத் தெரிவித்திருந்தார். மேலும் இலங்கை மக்களின் நலன்களுக்காக கண்டியில் உள்ள இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயத்தால் முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளுக்காக மகாநாயக்க தேரரால் வழங்கப்படும் தனிப்பட்ட ரீதியான வழிகாட்டல்கள் மற்றும் ஆதரவுக்காகவும் உயர் ஸ்தானிகர் நன்றியினைத் தெரிவித்திருந்தார். இச்சந்தர்ப்பத்தில், 2017 ஆம் ஆண்டில் பிரதமர் ஶ்ரீ நரேந்திர மோடி அவர்கள் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தமையை மகிழ்ச்சியுடன் நினைவூட்டியிருந்த அதி வணக்கத்துக்குரிய தேரர், இந்தியா – இலங்கை இடையில் வளர்ந்துவரும் ஒத்துழைப்பு மற்றும் நெருக்கமான உறவினை பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

***

**கொழும்பு**
**24 ஏப்ரல் 2023**